A/L 87 DAY CLASS
Mon. Fri. 7-30 — 8-30
பௌதிகம்
திரு இ. சத்தியசீலன்
★ ஒளியியல் ★
(துரித மீட்டல் வகுப்பு)
ஆரம்பமாகிவிட்டது
New Master
INSTITUTE
B M.G. Lane, JAFFNA

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

89 A/L
பிரிவு: 11
விலங்கியல் - நாகநாதன்
தாவரவியல் - குமாரதாசன்
பௌதிகவியல் - வர்ணம்
இரசாயனவியல் - தில்லைநாதன்
தூய - பிரயோக கணிதம் - திரு நல்லையா
New Master
INSTITUTE
B. M. G. Lane, JAFFNA.

சுடர் 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு சித்திரை மீ 21 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 றம்ழான் பிறை 05 (04-05-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 134

ஹெலிக்கொப்டரில் வந்து கடிதம் கையளிப்பு

# யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியை
# 8 ஆம் திகதியுடன் மூடிவிட உத்தரவு

## வைத்திய சேவைத் தடையும் பொருளாதாரத் தடையுடன் சேர்கிறது
### பெரும்தாக்குதலுக்கு முதற்படியா?

— அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், மே 4

வடமாகாணத்தின் பிரதம பெரியாஸ்பத்திரியும், பிரபல்யமும், கேந்திரமும் வாய்ந்ததாக விளங்கும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை இம்மாதம் எட்டாம் திகதியுடன் (எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன்) மூடி விடுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் பொதுவானதும், தமிழ்ப் பிரதேசங்களில் நவீன வசதிகள் கொண்ட ஒரேயொரு வைத்தியசாலையுமான யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை எட்டாம் திகதியுடன் மூடிவிடும் நடவடிக்கைகளை முடித்துவிட வேண்டும் என்று மகளிர் விவகார, போதனா ஆஸ்பத்திரிகள் அமைச்சின் செயலாளர் டாக்டர் டி. டி. சமரசிங்கா உத்தரவிட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரியின் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் நேற்று அவசர அவசரமாகக் கொழும்பில் இருந்து யாழ் கோட்டை முகாமுக்கு ஹெலிக்கொப்டரில் கொண்டு வரப்பட்டு, யாழ் பொலீஸ் நிலையம் ஊடாக ஆஸ்பத்திரியில் சேர்ப்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை மூடுவது வடபகுதி மக்கள் மீது ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைக்கு மேலதிகமாக, வைத்திய சேவைத் தடையை விதிப்பதாகும் என்றும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

போர்க் காலங்களில் கூட வைத்திய சேவைக்குத் தடை விதிக்கப்படுவதில்லை. பிரதான ஆஸ்பத்திரி ஒன்றை இவ்வேளையில் மூடுவது, மக்களைப் போரில் கொல்வதை விட, நாகரிகமற்ற காட்டுமிராண்டித் தனம் என்று பொதுமக்கள் பிரதிநிதிகள் பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

இன ஒழிப்பின் உச்சக் கட்டம்

பொருளாதாரத் தடையுடன் சேர்த்து வைத்திய சேவைத் தடையும் கொண்டு வரப்படுவது இன ஒழிப்பின் உச்சக் கட்டம் என்று அந்த வட்டாரங்கள் மேலும் கண்டனம் தெரிவித்தன.

சகல வசதிகளும் கொண்ட ஒரே ஒரு ஆஸ்பத்திரியை மூடுவதற்கு மக்கள் இடம்கொடுக்கக் கூடாது. ஆஸ்பத்திரியை மூடும் முடிவைக் கைவிட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் சிப்பாய்கள்—புலிகள் சமர்
### ஷெல்தாக்குதலில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், மே 4

புதுக்குடியிருப்பு இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட நூற்றுக்கணக்கான இராணுவத்தினரை பனங்காட்டு வெளியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்கினர்.

இத்தாக்குதலின் பலத்த இழப்புகளுடன் இராணுவம் பின்வாங்கியது.

பின்வாங்கிய இராணுவம் முகாமில் இருந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டது.

இதனால் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார், ஐவர் காயமடைந்தனர்.

(இ-10)

## பஸ்ஸை நோக்கி ஹெலியிலிருந்து குண்டு வீச்சு!
### மயிரிழையில் பயணிகள் தப்பினர்

வல்வெட்டித்துறை, மே 4

பயணிகள் பஸ் ஒன்றை நோக்கி வல்லைவெளியில் ஹெலியில் இருந்து குண்டு வீசப்பட்டது.

சாரதியின் சாதுரியத் திறன் பயணிகளுடன் பஸ் பாதுகாப்பாகத் தப்பியது. அப்போது பஸ் மரம் ஒன்றில் மோதிய தினால் சிறு சேதத்துக்குள்ளானது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சனிக்கிழமை மாலை வல்லை வெளியில் தரை இறங்க முயன்ற ஹெலிக்கொப்டர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். அப்போது மேலே எழும்பிய ஹெலிக்கொப்டர், பொதுமக்கள் பயணம் செய்த வாகனங்களையும் தாக்கத் தொடங்கியது.

அப்போது யாழ் நகரின் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பயணிகள் பஸ் மீது ஹெலியில் இருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

சாரதி, பஸ்ஸைச் சாதுரியமாகச் செலுத்தித் தப்ப முயற்சித்த போது பஸ் மீது குண்டு வீசப்பட்டது. அக்குண்டுகள் வீதி ஓரங்களில் விழுந்து வெடித்தன.

(இ-எ-160)

## சுகாதார, பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள்
### கோட்டை முகாமுக்கு திடீர் விஜயம்

யாழ்ப்பாணம், மே 4

பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகளும் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளும் நேற்று யாழ் கோட்டை முகாமுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டனர்.

பலாலி முகாமுக்கு விசேஷ விமானத்தில் வந்து சேர்ந்த இவர்கள் இரண்டு ஹெலிகொப்டர்களில் யாழ் கோட்டைக்கு வந்து சேர்ந்தனர்.

கோட்டை இராணுவ அதிகாரிகளுடன் உயர் மட்டப் பேச்சுக்கள் நடத்தியதன் பின் இவர்கள் யாழ். ஆஸ்பத்திரி சுற்று வட்டாரங்களையும் யாழ். கோட்டை சுற்றுவட்டாரங்களையும் ஹெலிக்கொப்டரில் இருந்தும் சீ பிளேனில் இருந்தும் பார்வையிட்டனர் என்று தெரியவருகிறது.

இவர்களுடன் வேறு இராணுவ உயர் அதிகாரிகளும் வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

(இ-10)

## ஹிட்லர்தனமாக இந்தியா நடப்பதாக நான் சொன்னேனா?
### இல்லை என்கிறார் ஜே. ஆர்

கொழும்பு, மே 4

ஹிட்லர் தனமாக இந்தியா நடந்துகொள்கின்றது என்று நான் கூறினேனா?

இல்லை என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா மறுத்திருக்கிறார்.

இதற்கு ஆதாரமாக வெளிநாட்டுச் செய்தியாளருக்குத் தான் அளித்த பேட்டியின் முழு விபரங்களையும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா இன்று அல்லது நாளை வெளியிடவிருக்கிறார்.

ஒலிப்பதிவு செய்யப்பட்ட பேட்டியின் முழுப் பிரதியைத் தயாரிப்பதில் ஜனாதிபதி செயலகம் கடந்த சனிக்கிழமை முழுமூரமாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி ஜெஸி



ஆஸ்பத்திரியை மூடிற தில பெரிய சதி இருக்கு. அதுக்கு இடம் குடுத்தால் அவை எல்லாத்திலும் இடம் பிடுங்கிற கதையாய்த்தான் முடியும்.

## உரும்பராயில் விழுந்த ஷெல்

யாழ்ப்பாணம், மே 4

பலாலியிலான் இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் உரும்பராய் சந்தியிலும் அங்குள்ள வீடு ஒன்றிலும் விழுந்து வெடித்தன.

இதன் காரணமாக வீட்டிலுள் இருந்த ரி வி உட்பட பலபொருட்கள் சேதமடைந்தன.

ஆறுமைல்களுக்கு அப்பால் இருந்த ஷெல் குண்டுகள் வந்து விழுந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ் நகர்ப்பகுதியிலும் நேற்றிரவு ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

(இ-10)

மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை இல்லையேல்

## அரசின் திட்டமிட்ட கொலைகளாகவே கருதப்படும்
### ஹெலி குண்டு வீச்சில் இறந்தோர் மரண விசாரணையில் நீதிவான்

யாழ்ப்பாணம் மே 4

ஆயுதப் படையினர் தினமும் மேற்கொள்ளும் படுகொலைகளில் இருந்து மக்களைப் பாதுகாக்க சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தவறின் ஆயுதப் படையினர் நடத்தும் கொலைகள் யாவும் அரசாங்கத்தால் திட்டமிட்டு செய்யப்பட்டவையாகவே கருதப்படும்.

சனிக்கிழமை மாலை புன்னாலைக்கட்டுவனில் நடைபெற்ற ஹெலிகொப்டர் குண்டுவீச்சில் நால்வர் கொல்லப்பட்டனர்.

மரண விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கிய யாழ் நீதவான் திரு. கனகசபை கதிரவேற்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்;

சனிக்கிழமை சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களது பெயர் விவரங்கள் வருமாறு:-

அன்னம்மா சந்திரசேகரம் (வயது 45 புன்னாலைக்கட்டுவன்)

அருளம்பலம் சுப்பிரமணியம் புன்னாலைக்கட்டுவன் (வயது 70)

மார்க்கண்டு இராமநாதன் ஈவினை புன்னாலைக்கட்டுவன் (வயது 83).

சிவஞானசுந்தரம் தேவா (பெண்) ஏழாலை (வயது 18)

நீதவான் தனது தீர்ப்பில் மேலும் தெரிவித்ததாவது:-

இக்கொலைகள் ஹெலிகொப்டரிலிருந்து குண்டு வீசப்பட்டதால் ஏற்பட்ட கொலைகள். இறந்தவர்கள் அப்பாவிகள்.

இங்கு அளித்த சாட்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

04-05-1987
திங்கட்கிழமை
சுபநேரம்:-
11-56 முதல் 1-56 வரை
ராகுகாலம்:-
7-26 முதல் 8-56 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## பாடசாலைகள் நாளை ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், மே 4

அரசாங்க பாடசாலைகள் முதலாம் தவணை விடுமுறைக்குப் பின் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

இன்று திங்கட்கிழமை பாடசாலைகள் ஆரம்பமாகுமென்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் கொழும்பில் அண்மையில் நிகழ்ந்த குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஒரு நாள் பிந்தியே பாடசாலைகள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தை யாழ் வீதிகளில் எதிர்கொள்ள புலிகள் தயார்!
### ஜே. ஆரின் மிரட்டலுக்கு அன்ரன் பாலசிங்கம் பதில்

சென்னை, மே 4

இலங்கை அரசின் இராணுவத்தை நேருக்கு நேர் யாழ் வீதிகளில் சந்தித்துப் போரிடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எப்போதும் ஆயத்தமாக இருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம் ஏ. எப். பி செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"குடாநாட்டை இலங்கை அரசு இராணுவம் மீண்டும் கைப்பற்றும் பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தவிர்க்க முடியாது" என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஏ. எப். பி. செய்தி ஸ்தாபனத்துக்குப்பேட்டி அளித்திருந்தார்.

திரு அன்ரன் பாலசிங்கம் ஜே.ஆருக்கு பதில் அளிக்கும் விதத்தில் நேற்று அளித்த பேட்டியில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றுவது என்பது இயலாத ஒன்று.

யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் கைப்பற்ற முயற்சித்தால் தனது படையின் இறுதி ஆள் வரை தமிழீழ விடுதலைப் புலிகள் போராடுவார்கள்.

யாழ்ப்பாணம் மீண்டும் இராணுவத்தின் வசம் செல்வது என்பது நடக்காத ஒன்று.

இலங்கை அரசு இராணுவத்தை நேருக்கு நேர் யாழ்ப்பாண வீதிகளில் சந்தித்துப் போரிடுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எப்போதும் ஆயத்தமாக இருக்கிறது.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் இரண்டு சாராருக்குமே ஏற்படப் போகும் விளைவுகள் மிகவும் கொடூரமாகவே இருக்கும்; யாழ்ப்பாணம் வீதிகளில் இரத்த வெள்ளம் ஓடும்.

தனித்தமிழ் ஈழநாடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவை பதவி நீக்கும் உத்தேசம் இல்லை
### என்கிறார் ஷெயில்சிங்

புதுடில்லி, மே 4

பிரதமர் ராஜீவ் காந்தியை பதவி நீக்கம் செய்யும் உத்தேசம் தமக்கு அறவே இடையாது என்று ஜனாதிபதி ஷெயில்சிங் நேற்று அறிக்கை ஒன்றில் தெரிவித்

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

